பக்கங்கள்: 08
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 31 வெள்ளிக்கிழமை 14.05.2021 கதிர் 56

## முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல்; மேலும் 27 பேருக்கு தடை உத்தரவு!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.14

கொரோனா நிலைமையை காரணம் காட்டி முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நடத்த மேலும் 27 பேருக்கு முல்லைத்தீவு நீதிமன்றில் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

மே 18 அன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கும், அந்தப் பகுதியில்

2

# கடல் வழியாக ஆஸி செல்ல முயன்ற முப்பது தமிழர்கள் சிலாபத்தில் கைது

### அவர்களில் 17 பேர் யாழ்ப்பாண இளைஞர்கள்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.14

கடல் வழியாக வெளிநாடு செல்ல முயற்சித்த வடக்கு, கிழக்கைச் சேர்ந்த 30 தமிழர்கள் சிலாபம் கடற்கரையை அண்டிய பிரதேசத்தில்வைத்து நேற்று மாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 17 பேர் யாழ்ப்பாணம் மாவட்டத்தையும் ஏனையோர் முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களையும் சேர்ந்தவர்களாவர். இவர்கள் கப்பல் வழியாக ஆஸ்திரேலியா நோக்கிச் செல்லத் திட்டமிட்டிருந்தனர் என விசாரணைகளில்

2



# முழு நேரப் பயணத் தடையால் முற்றாக முடங்கியது இலங்கை

### வெறிச்சோடிக் காணப்படும் நகரங்கள்



யாழ்ப்பாணம்



கொழும்பு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் மிக வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு நேற்றிரவு 11 மணி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பயணக்கட்டுப்பாடு எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை அமுலில் இருக்கும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

2

## ஊடகவியலாளருக்கு இராணுவம் இடையூறு



நாட்டில் தொடர்ச்சியாக மூன்று நாள்களுக்கு விதிக்கப்பட்ட பயணத்தடையை அடுத்து முல்லைத்தீவு மாவட்டத்தின் நகரங்கள் அனைத்தும் முழுமையாக முடங்கியுள்ளன.

இந்நிலையில், மாங்குளம் பகுதியில் வீதித்தடையில் இராணுவத்தினர் சோதனை

2



## மேலும் 24 பேர் சாவு; கொரோனா காவு 892

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 24 மரணங்கள் நேற்றுப் பதிவாகியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

15 ஆண்களும், 9 பெண்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார் என்று அரசதகவல்திணைக்களம் தெரிவித்துள்ளது.

2

### பல மாவட்டங்களில் சீரற்ற காலநிலை

## அனர்த்தங்களில் சிக்கி இருவர் பலி

இலங்கையில் பல மாவட்டங்களிலும் நிலவும் சீரற்ற காலநிலை நிலவுகின்றது. வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளனர்.

காலி மாவட்டம், உடுகம – அளுத்வத்த பகுதியில் நேற்று மாலை வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டிருந்த நபர் ஒருவர் இன்று காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கேகாலைப் பகுதியில் இன்று அதிகாலை வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததால் அதில்

2

## தமிழரின் தூபிகளை நொறுக்கி மானங்கெட்ட அரசியல் பிழைப்பு

### அரசை சாடுகின்றார் மனோ எம்.பி.



தெற்கில் கிளர்ச்சிகளின்போது கொல்லப்பட்ட சிங்கள மக்களின் நினைவாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள தூபிகளைப் போன்று, போரில் மாண்ட தமிழ் மக்களின் நினைவாக நிர்மாணிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி, இலங்கை இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது நொறுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டவட்டமான மானங்கெட்ட செய்கையை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், மாண்டவர்களை நிந்திக்கும் இந்த அநாகரிக செயலை கண்டிக்கும்படி சிங்கள முற்போக்கு சத்திகளையும், பௌத்த சமூக தலைவர்களையும் நாம்

2

## இந்தியாவிலிருந்து வந்த 55 கிலோ கேரளக் கஞ்சா

### கட்டுமரத்துடன் சிக்கியது; சந்தேகநபர் தப்பியோட்டம்

(ந.லோகதயாளன்)

யாழ். மாதகல் ஊடாகக் கட்டுமரத்தில் கடத்தி வரப்பட்ட 55 கிலோ கேரளக் கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டது.

இந்தியாவில் இருந்து கடத்திவரப்பட்டு நடுக்கடலில் வைத்து கைமாற்றப்பட்டதாகக் கருதப்படும் கேரளக் கஞ்சா, கட்டுமரத்தில் கடத்தி வரப்பட்ட வேளை இராணுவத்தினர் வருவதைக் கண்ட ஓட்டி கட்டு

2



## நினைவுத்தூபியை அழித்துடைக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை

### இராணுவப் பேச்சாளர் கூறுகின்றார்

முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபி உடைக்கப்பட்ட சம்பவத்துக்கும் தமக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிலந்த பிரேமரத்ன தெரிவித்தார்.

பல வருடங்களுக்கு மேலாக குறித்த நினைவுத் தூபி அந்த இடத்தில் காணப்பட்ட போதிலும், இராணுவம் அந்த நினைவுத் தூபியை உடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

2



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## தமிழரின் தூபிகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அழைக்கின்றோம்.

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி இடிக்கப்பட்டமை தொடர்பில் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் பதிவிட்டுள்ள மனோ கணேசன், இது பற்றி மேலும் கூறியுள்ளதாவது:-

கொரோனா நோய் ஒழிப்பில் தோல்வி, துறைமுக நகர் சீனாவுக்கு தாரைவார்ப்பு ஆகிய நாட்டின் உண்மையான தேசிய பிரச்சினைகளை சிங்கள மக்களின் கவனத்துக்கு வராமல் தடுக்க, அவ்வப்போது தமிழ், முஸ்லிம் மக்களின் மீது இனவாதம் காட்டி தேசிய கவனத்தை வேறு பக்கம் கொண்டு போகும் அரசின் நீண்டநாள் தந்திர அரசியல் ஒரு மானங்கெட்ட அரசியல் பிழைப்பு என்பதை, அரசின் உள்ளே இருக்கும் தமிழ், முஸ்லிம் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எடுத்துக்கூற வேண்டும்.

இந்தத் திட்டவட்டமான மானங்கெட்ட செய்கையை நாம் கண்டிக்கின்றோம். அத்துடன், மாண்டவர்களை நிந்திக்கும் இந்த அநாகரிக செயலை கண்டிக்கும்படி சிங்கள முற்போக்கு சக்திகளையும், பௌத்த சமூக தலைவர்களையும் நாம் அழைக்கின்றோம்.

தெற்கில் 1971, 1989 கிளர்ச்சிகளின் போது கொல்லப்பட்ட சிங்கள மக்களின் நினைவாக தூபிகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று, போரில் மாண்ட தமிழ் மக்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி நிர்மாணிக்கப்பட்டது. இது இன்று இலங்கை இராணுவ சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது நொறுக்கப்படுகின்றது.

ஆகவே, மாண்டவர்களை நிந்திக்கும் இத்தகைய அநாகரிக செயல்களைக் கண்டிக்காமல், சிங்கள முற்போக்கு சக்திகளும், பௌத்த சமூக தலைவர்களும் தொடர்ந்தும் மௌனமாக இருக்க முடியாது. அதேபோல் மாண்டுபோன தமிழ் மக்களை நேரடியாகக் குறிவைத்து அவமானப்படுத்தும் இந்த நடவடிக்கையை, தமிழ், முஸ்லிம் உறவை விரும்பும் அனைத்து தமிழ் பேசும் முஸ்லிம் அரசியல் தலைவர்களும், கட்சிகளும் கண்டிக்க வேண்டும் –என்றுள்ளது.

## ஊடகவியலாளருக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற செயற்பாடுகளை வீடியோ மற்றும் புகைப்படம் எடுக்க ஊடகவியலாளருக்கு அவர்கள் தடை விதித்தனர்.

இதனைத் தொடர்ந்து மாங்குளம் நகரப் பகுதியில் கடைகள் பூட்டப்பட்டிருக்கின்ற நிலைமைகளைப் புகைப்படம், வீடியோ எடுக்கவும் மாங்குளம் நகர் பகுதியில் நின்ற இராணுவத்தினர் இடையூறுகளை ஏற்படுத்தியுள்ளனர்.

நாட்டில் கொரோனாத் தொற்றைக் காரணம் காட்டி வடக்கு, கிழக்கில் அதிகளவான இராணுவச் சோதனைச் சாவடிகளும் இராணுவக் கெடுபிடிகளும் காணப்படுகின்றன என்று பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், இராணுவத்தினர் இவ்வாறான செயற்பாடுகளில் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மரத்தையும் கைவிட்டு தப்பியோடியுள்ளார்.

இதன்போது கஞ்சாவைக் கைப்பற்றிய படையினர் அதனை இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கொரோனாப் பரவல் காரணமாக கைப்பற்றிய கஞ்சா தீயிட்டு எரிக்கப்படலாம் எனத் தெரியவருகின்றது.

## அனர்த்தங்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சிக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று காலை முதல் நாட்டின் மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் கடும் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது.

இதனால் தென் மாகாணத்தில் பல பிரதேசங்களில் வெள்ள அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. அந்தப் பிரதேசங்களில் மீட்புக் குழு வினரைத் தயார் நிலையில் வைத்திருப்பதாக அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

தொடரும் மழையுடன் கூடிய காலநிலையால் களுத்துறை, கேகாலை, கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது எனத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேற்றிரவு கினிகத்தேனை பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக பொல்பிட்டிய மாதெனியாவத்த பகுதியில் மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால் அங்குள்ள வீடொன்றின் மீது மண் மேடு சரிந்து விழுந்ததில ஐவர் காயமடைந்துள்ளனர் என்று கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மண்ணுக்குள் புதையுண்டவர்களைப் பிரதேச மக்களும், லக்ஸபான இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினரும் மீட்டுள்ளனர்.

இதன்போது பலத்த காயமடைந்த மகளும், தாயும் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தொடர்ந்தும் மழை பெய்தால் மலைப்பாங்கான பகுதிகளில் மண் சரிவு ஏற்படக்கூடும் என்று நுவரெலியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

## மேலும் 24 பேர் சாவு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்றுப் பதிவான 24 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 892 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## நினைவுத்தூபியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அவ்வாறான பின்னணியில், தற்போது அந்த நினைவுத் தூபியை உடைக்க வேண்டிய தேவை தமக்குக் கிடையாது எனவும் அவர் மேலும் கூறினார்.

## முழு நேரப் பயணத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) முழு நேரப் பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் 25 மாவட்டங்களின் நகரங்களும் வெறிச்சோடிக் காணப்படுகின்றன. வீதிகளில் முப்படையினரும், பொலிஸாரும், விசேட அதிரடிப் படையினரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோரைத் தவிர, வேறு எந்தவொரு தரப்பினரும் வெளியில் செல்லக்கூடாது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், மருந்தகங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வர்த்தக நிலையங்களும் இந்தக் காலப் பகுதியில் மூடப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

எவரேனும் ஒருவர் சுகயீனமடையும் பட்சத்தில் அவரை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

எதிர்வரும் 17ஆம் திகதி வரை வெளியில் செல்ல தேசிய அடையாள அட்டை நடைமுறை செல்லுபடியாகாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## முள்ளிவாய்க்காலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மக்கள் ஒன்றுகூடுவதற்கும் பொலிஸார் நீதிமன்றத்தின் ஊடாகத் தடையுத்தரவைப் பெற்றுக்கொண்டுள்ளனர். நாட்டில் தற்போது நிலவும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு மே 16ஆம் திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையில் முள்ளி வாய்க்கால் பகுதியில் மக்கள் ஒன்றுகூடும் வகையில் எந்த நிகழ்வும் நடத்தப்படக்கூடாது என்று முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் ஊடாக நேற்று தடை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இதன்படி முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த து.ரவிகரன், ம.ஈஸ்வரி, பீற்றர் இளஞ்செழியன், க.விஜிந்தன், ச.விமலேஸ்வரன் ஆகிய ஐவருக்கு எதிராக முன்பு தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில் தற்போது மேலும் 27 பேருக்கு எதிராகவும் தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

## கடல் வழியாக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தெரியவந்துள்ளதென கடற்படையினர் தரப்பில் கூறப்பட்டது.

இந்த நபர்கள் மேலதிக விசாரணைக்காக தற்போது சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

## 42 கிராம சேவகர் பிரிவுகள் 17 முதல் முற்றாக முடக்கம்!

கொரோனா வைரஸ் தொற்று நிலையை அடுத்து மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 42 கிராம சேவகர் பிரிவுகள் எதிர்வரும் 17ஆம் திகதி அதிகாலை 4 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிராம சேவகர் பிரிவுகளே இவ்வாறு முடக்கப்பட்டுள்ளன.

நேற்றிரவு 11 மணி முதல் எதிர்வரும் 17ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் பயணத்தடை அமுலில் உள்ளது. எனவே, 17 ஆம் திகதி முதல் தான் 42 கிராம சேவகர் பிரிவுகளிலும் தனிமைப்படுத்தல் நடைமுறை அமுலுக்கு வரும்.

## மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் சாவு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.14

கோண்டாவில் பகுதியில் மின்சாரம் தாக்கிப் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் இரு நாள்களாக மேற்கொள்ளப்பட்ட சிகிச்சை பலனின்றி பரிதாபகரமாக உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தில் யோகேஸ்வரன் அருந்தினி என்னும் 37 வயதினையுடைய இரு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

கடந்த 12ஆம் திகதி வீட்டு முற்றத்தில் இருந்த பந்தலின் அருகே இருந்த மின் குமிழிற்கான இணைப்பு வயரில் ஏற்பட்ட மின் ஒழுக்கு பந்தலின் மூலம் கசிந்தமையால் இவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது. இதன்போது மனைவி எழுப்பிய அவலக் குரல் கேட்டு ஓடிய கணவர் மீட்க முயன்ற சமயம் அவரும் மின்சாரத் தாக்கத்திற்கு இலக்கானார்.

இருந்தபோதும் ஏனையோர் மின் இணைப்பை துண்டித்து வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இருந்தபோதும் சிகிச்சை பலனின்றி இன்று காலை பரிதாபகரமாக உயிரிழந்தார்.

மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.




# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கு இன்றுடன் 45 ஆண்டுகள் பூர்த்தி

**இலங்கைத் தமிழர்களின் வரலாற்றில் இன்றைய தினம் – மே 14 ஆம் திகதி – மிக முக்கியமான நாள்.**

**தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதமும், பௌத்த சிங்களப் பேரினவாத அடக்குமுறைகளும் தாங்கொணா அளவிற்கு உக்கிரமடைந்த போது, தமிழ் – சிங்களத் தேசியங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் முற்றி, இன இணக்கப்பாடும் சக வாழ்வும், புரிந்துணர்வும், நல்லிணக்கமும் சாத்தியமற்றவை என்ற நிலைப்பாட்டுக்கு வந்த தமிழ் மக்கள் தீர்க்கமான முடிவெடுத்த நாள் இது.**

**சிங்களத் தரப்புகளோடு சமரச சகவாழ்வு சாத்தியமற்றது என்று சிந்திக்கத் தலைப்பட்ட தமிழ் இளைஞர்கள் அதனால் தமிழர் தேச விடுதலைக்கு ஆயுத வழிப் போராட்டமே ஒரே மார்க்கம் என்று தீர்மானம் மேற்கொண்ட கால கட்டம் அதுதான்.**

**தொடர்ந்த அரசியலை, பதவி சுகத்துக்கான மேடையாக்காமல் தமிழ் மக்களின் நலனுக்கும் விடுதலைக்குமான உருப்படியான செயற்றிட்டம் ஒன்றை முன்வைக்கும் படி தமிழ் அரசியல் கட்சிகள் மீது தமிழ் இளைஞர்கள் அழுத்தம் – நெருக்குவாரம் – பிரயோகித்த சூழல்.**

**அந்தச் சமயத்தில்தான் – 1976 மேயில் – அப்போதைய தமிழர் ஐக்கிய முன்னணி (பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி) வட்டுக்கோட்டையில் தேசிய மாநாடு ஒன்றைக் கூட்டியது.**

**தந்தை செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில்தான் 'தனித் தமிழீழம்' கோரும் – வலியுறுத்தும் – தீர்மானத்துக்குத் தமிழினம் வந்தது. நாற்பத்தியைந்து ஆண்டுகளுக்கு முன்னர், இந்தத் தினத்தில்தான் – 1976 மே 14 ஆம் திகதி – அந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தத் தீர்மானம் நோக்கற்பாலது**

***"தமிழர் விடுதலை முன்னணியின் முதலாவது தேசிய மாநாடு, வட்டுக்கோட்டை தொகுதியிலுள்ள பண்ணாகத்தில் 1976 மே 14ஆம் நாள் நடைபெற்ற போது கீழ்கண்ட பிரகடனம் செய்யப்பட்டது.:–***

***"இலங்கைத் தமிழ் மக்கள், ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களின் ஆயுத பலத்தால் வெற்றி கொள்ளப்படும் வரை, சிறப்பு வாய்ந்த பழம்பெரும் மொழி, மதங்கள், தனித்துவமான பண்பாடு, பாரம்பரியம் ஆகியனவற்றைக் கொண்டிருந்தமையோடு, பல நூற்றாண்டுகளாக ஒரு தனித்துவமான பிரதேசத் தில், தனியரசை அமைத்து சுதந்திரமாக வாழ்ந்த வரலாறும் உடையவர்கள். இவற்றிற்கு மேலாக, தங்களது சொந்த மண் ணில் தனி இனமாக தங்களைத் தாங்களே ஆட்சிபுரிந்து வாழ வேண்டும் என்ற உறுதிப்பாடும் உடையவர்கள். இத்தகைய பண்புகளைப் பெற்றவர்கள் என்பதால் தமிழர்கள் சிங்களவர் களிடமிருந்து வேறுபட்ட தனித்துவமான தேச அமைப்பைக் கொண்டவர்கள். இலங்கையின் 1972ஆம் ஆண்டின் குடியர சுக்கான அரசியல் யாப்பு, புதிய குடியேற்ற எஜமான்களாகிய சிங் களவர்களின் ஆட்சியின் கீழ் தமிழர்களை ஓர் அடிமை இனமாக மாற்றியுள்ளது.***

***"தவறான வழியில் பெற்றெடுத்த ஆட்சியதிகாரத்தைக் கொண்டு சிங்களவர்கள் தமிழ் மக்களின் நிலவுரிமை, மொழியுரிமை, குடியுரிமை, பொருளாதார வாழ்வுரிமை, கல்வியுரிமை, வேலைவாய்ப்புரிமை ஆகியனவற்றை மறுத்து, அவர்களது தேசியக் கட்டமைப்பின் அடிப்படைகளையே அழித்துள்ளனர். ஆகவே, தமிழீழத் தனியரசு நிறுவுவது குறித்து வடகிழக்கிற்கு வெளியே வாழும் பெருந்தோட்டத் தொழிற் சங்கமாகிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த தயக்கத்தை கருத்தில் எடுக்கும் அதேவேளை, தமிழர் தேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு தேசத்திற்கும் உரித்தான சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில், சுதந்திரமான, இறையாண்மையுடைய, மத சார்பற்ற, சோலிச தமிழீழ அரசு மீளப்பட்டு மீள்நிர்மாணம் செய்யப்படவேண்டுமென இம்மாநாடு தீர்மானிக்கிறது."***

**– அன்று ஆரம்பித்த அந்தக் கோரிக்கைக்கான போராட்டம் அஹிம்சை வழியிலிருந்து முற்றாக ஆயுத வழிக்குத் திருப்பப்பட்டு, 2009 மே 18 ஆம் திகதி முடிவுக்கு வந்தது.**

**இதன் பின்னர் தமிழர் தேசத்துக்கு தலைமை வகித்த தரப்பு – குறிப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு – வட்டுக்கோட்டைத் தீர்மானம் கைவிடப்பட்டு விட்டதாக அறிவித்தது. பிரிவினை எண்ணம் தமிழர்களுக்கு இப்போது இல்லை என்று திரும்பத் திரும்ப அது வலியுறுத்துகின்றது.**

**'ஒன்றுபட்ட', 'பிரிக்க முடியாத', 'ஐக்கிய' இலங்கைக்குள்தான் தீர்வு என்று பிரிவினைக்கு எதிரானவர்கள் நாம் என்று வலியுறுத்திக் காட்டுவதில் தமிழர் தலைமை அதீத கவனமும் சிரத்தையும் வெளிப்படுத்தி நிற்பது வெளிப்படையானது.**

**ஆனால் தமிழர் தரப்பின் நீதியான இந்த நேசக்கரத்தை – நட்புடனான ஒற்றுமை அழைப்பை – உதாசீனப்படுத்தி, புறக்கணித்து, ஓரம்தள்ளி, திமிர்த்தனத்துடன் நடக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத ஆட்சித் தலைமைகள் தமிழர்களை மீண்டும் பழைய தீர்மானத்தை நோக்கி நெட்டித்தள்ளும் பாணியில் செயற்படுவதுதான் இன்றைய துரதிஷ்டமாகும்; துன்பியல் நிலைமையாகும்.**

## சட்டமா அதிபர் அலுவலக அதிகாரிகளுக்கு அதிநவீன பயிற்சி நிலையம் அங்குரார்ப்பணம்



அமெரிக்காவிடம் இருந்தான உதவியுடன் சட்டமா அதிபர் திணைக்களம் தனது அதிகாரிகளுக்கு அதிநவீன பயிற்சி நிலையம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்துள்ளதாக சட்டமா அதிபரின் ஒருங்கிணைப்பு அதிகாரி அரசசட்டத்தரணி நிஷாரா ஜயரத்ன தெரிவித்தார்.

வழக்குகள் மற்றும் சட்ட கோப்புகளைக் கண்காணிக்க இலத்திரனியல் முறைமை ஒன்றையும் ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை நிலை நிறுத்துவதற்கு நீதித்துறை வல்லுநர்களின் திறனை இந்தக் கருவிகள் வலுப்படுத்தும் என இலங்கைக்கான அமெரிக்க பிரதித் தூதுவர் மார்ட்டின் கெலி தெரிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அவர் இத தெரிவித்துள்ளார்.

பொருளாதார வளர்ச்சியைத் தூண்டும் மற்றும் மனித கௌரவத்தை பாதுகாக்கும் நீதிக்கான அணுகலை பலப்படுத்தவும் நல்லாட்சியை ஊக்குவிக்கவும் உலகம் முழுவதிலும் அமெரிக்காவின் உதவிகள் உதவியுள்ளன.

நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கருவிகள் நீதி நிர்வாகத்தை மேலும் திறனுடையதாக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## அடுத்தவாரம் மூன்று நாள்கள் மட்டும் நாடாளுமன்றம் கூடும்

நாடாளுமன்ற அமர்வுகளை அடுத்த வாரம் மே 18 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை மூன்று நாள்கள் நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (வியாழக்கிழமை) கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

கொவிட் 19 சுகாதாரப் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நாடாளுமன்ற அமர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தை எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்களில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளவும் இணக்கம் காணப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய 19 ஆம் திகதி விவாதம் காலை 10 மணி முதல் 5.30 மணிவரையும், 20 ஆம் திகதி விவாதம் காலை 10 மணி முதல் பிற்பகல் 4.30 வரையும் நடத்தப்படவுள்ளது.

மே 18 ஆம் திகதி நடைபெறும் நாடாளுமன்ற அமர்வில் நிதிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி, நிதிச் சட்டத்தின் கீழான 2 கட்டளைகள், மறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்திச் சட்டத்தின் கீழான கட்டளை, விசேட வியாபார பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான 8 கட்டளைகள், செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழான 2 கட்டளைகள், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதி என்பன விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப் படவுள்ளன.

அன்றையதினம் காலை 10 மணிக்கு சபை அமர்வுகள் ஆரம்பமானதும் முற்பகல் 11 மணிவரை நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார். அத்துடன் வியாழக்கிழமை மாலை 4.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான பிரேரணை விவாதத்துக்கு எடுக்கப்படும்.

## ஆராதனையில் கலந்துகொண்ட பெண்ணுக்கு கொரோனாத் தொற்று

சூம் தொழிநுட்பத்தின் ஊடாக மதபோதகர் ஒருவர் வெல்லம்பிட்டியில் உள்ள வீடொன்றில் நடத்திய ஆராதனையில் கலந்துகொள்வதற்காகச் சென்ற பெண் ஒருவருக்குக் கொவிட் 19 தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் அடிப்படையில் குறித்த பெண்ணுக்கும் அவருடைய கணவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில் அவருடன் தொடர்பில் இருந்த ஆராதனையில் கலந்துகொண்ட 6 குடும்பத்தைச் சேர்ந்த 14 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சூம் தொழிநுட்பத்தின் ஊடாக ஆராதனை நடத்திய மதபோதகர் எச்சரிக்கப்பட்ட அதேவேளை, மேலதிக விசாரணைக்காக பிரதான சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முன்னிலையாகுமாறும் அவர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

## தியகலவில் மண் சரிவு

ஹற்றன் –கொழும்பு பிரதான வீதியின் தியகலப் பகுதியில் ஏற்பட்ட மண் சரிவு காரணத்தால் குறித்த வீதியில் வாகன போக்குவரத்து சுமார் ஒரு மணித்தியாலம் தடைப்பட்டது என கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ந்து பெய்து வரும் கடும் மழை காரணமாக நேற்று (வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களும், பொலிஸாரும் மண்மேட்டை பகுதி அளவில் அகற்றிய பின் 7 மணிக்குப் பின்னர் ஒரு வழிப் போக்குவரத்து இடம்பெறுகின்றது.

எனினும், வாகன சாரதிகள் மிக அவதானத்துடன் வாகனத்தைச் செலுத்துமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## முடங்கியது மட்டக்களப்பு

**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

கொரோனா வைரஸ் தாக்கத்தினை கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கத்தால் நாடாளாவிய ரீதியில் வியாழன் இரவு முதல் எதிர்வரும் திங்கட்கிழமை அதிகாலை 4 மணி வரை பயணத்தடை அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தினதும் இயல்பு நிலை முழுமையாக முடங்கியுள்ளமையை அவதானிக்க முடிகிறது.



பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளமையுடன், அத்தியாவசியத் தேவைகள் நிமித்தம் வெளியில் செல்வோரைத் தவிர ஏனையவர்கள் பாதுகாப்புத் தரப்பினரால் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அனைத்து வியாபார நிலையங்களும் மூடப்பட்டுள்ளதுடன், மக்கள் நடமாட்டமற்ற சூழலை அவதானிக்க முடிகிறது.

# இரண்டாவது தவணையில் வேறு தடுப்பூசி செலுத்திக் கொண்டவருக்கு உடல் உபாதை

முதல் தவணையாக கொவேக்சின் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்ட 72 வயது முதியவருக்கு இரண்டாவது தவணையாக கொவிஷீல்ட் மருந்து செலுத்தப்பட்டதால் ஏற்பட்ட சிக்கல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலம் ஜால்னா மாவட்டத்தில் உள்ள கிராமத்தைச் சேர்ந்த 72 வயதான தத்தாத்ரேயா வாக்மரே கடந்த மார்ச் மாதம் 22 ஆம் திகதி ஊரக மருத்துவமனை ஒன்றில் பாரத் பயோடெக் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட கொவேக்சின் தடுப்பூசியைச் செலுத்திக்கொண்டுள்ளார்.

அதன் பின்னர் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி இரண்டாவது தவணை தடுப்பூசியையும் செலுத்திக்கொண்ட அவருக்கு, லேசான காய்ச்சலும் உடலின் சில பகுதிகளில் தோல் அழற்சியும் ஏற்பட்டுள்ளன. உடனடியாக பார்டூர் பகுதியில் உள்ள சுகாதார மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயம் ஊடகங்களின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது குறித்து வாக்மரேயின் மகன் திகம்பரிடம் ஊடகவியலாளர்கள் விவரங்களைப் பெற்றுள்ளனர். ‘இரண்டாவது தவணைத் தடுப்பூசி செலுத்திக்கொண்ட பிறகு, எனது தந்தைக்கு காய்ச்சல், தோல் அழற்சி ஏற்பட்டதால் பதற்றமடைந்தோம். உடனடியாக சுகாதார மையத்தில் சேர்த்து அவருக்கு சிகிச்சை வழங்கினோம். அவரது தடுப்பூசி இறுதிச் சான்றிதழைப் பார்த்தபோது, அதில் கொவிஷீல்ட் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்போதுதான் எங்களுக்கு நடந்த குளறுபடி தெரிந்தது.

அவர் முதலில் கொவேக்சின் செலுத்திக் கொண்டுள்ளார். முதல் தவணைத் தடுப்பூசிக்கான சான்றிதழிலும் கொவேக்சின் என்றுதான் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் காண்பித்துத்தான் அவர் இரண்டாவது தவணைக்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார். ஆனால், சுகாதாரப் பணியாளர்கள் இதைக்கூடக் கவனிக்காமல் அவருக்கு கொவிஷீல்ட் ஊசியைச் செலுத்தி விட்டனர்.

எனது தந்தை படிப்பறிவற்றவர். எனக்குக்கூட ஓரளவுதான் வாசிக்கத் தெரியும். சுகாதாரப் பணியில் ஈடுபட்டுள்ளவர்கள் சரியான தடுப்பூசிதான் அளிக்கப்படுகிறதா என கவனிக்க வேண்டுமில்லையா? அவர்களது கடமை அது. இதுகுறித்து உள்ளூர் சுகாதார அதிகாரிகளிடம் புகார்



செய்துள்ளோம்’ என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து விசாரணை நடைபெறுகின்றது என சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## கொவிஷீல்ட் தடுப்பூசியின் 2 டோஸ்களுக்கான இடைவெளி 12-16 வாரங்களாக அதிகரிப்பு!

கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸ்களைச் செலுத்திக்கொள்வதற்கான இடைவெளியை 12-16 வார காலமாக அதிகரிக்க இந்திய மத்திய சுகாதார அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தியாவில் கொரோனா நோய்த் தொற்றுக்கு எதிராக பாரத் பயோடெக் நிறுவனத்தின் கொவேக்சின் மற்றும் சீரம் நிறுவனத்தின் கொவிஷீல்ட் தடுப்பூசிகள் பயன்பாட்டில் உள்ளன. கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸ்களுக்கு இடையே 4-6 வார கால இடைவெளி முதலில் பின்பற்றப்பட்டு வந்தது. அதன் பின்னர் கடந்த மார்ச்சில் இரண்டாவது டோஸ்க்கான இடைவெளி 6-8 வாரங்கள் இருந்தால் மிகுந்த பயன் கிடைக்கும் என அறிவுறுத்தப்பட்டது. இந்த நிலையில் கடந்த மூன்று மாதத்தில் இரண்டாவது முறையாக கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது தவணைகளைச் செலுத்திக் கொள்வதற்கான இடைவெளியை அதிகரித்து நிபுணர்கள் குழு பரிந்துரை செய்துள்ளது.

இதன்படி, தற்போது 12-16 வாரமாக இந்த இடைவெளி அதிகரிக்கப்பட்டுள்ளது. இது, நிகழ்கால ஆதாரங்களின் படி குறிப்பாக, இங்கிலாந்தில் இருந்து பெறப்பட்ட ஆய்வு முடிவுகளின் படி எடுக்கப்பட்ட முடிவு என தேசிய தொழில்நுட்ப நிபுணர் குழு தெரிவித்துள்ளது.

இந்த மாற்றம் கொவிஷீல்ட் தடுப்பூசிக்கு மட்டுமே பொருந்தும் என்றும் கொவேக்சின் தடுப்பூசிக்கு அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கொவேக்சின் தடுப்பூசியின் முதல் மற்றும் இரண்டாவது டோஸ்களுக்கான கால இடைவெளியானது 4 வார காலமாகவே இருக்கின்றது. தேசிய தொழிநுட்ப ஆலோசனைக் குழுவின் இந்தப் பரிந்துரைக்கு மத்திய சுகாதார அமைச்சகம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.




கர்ப்பிணிகள் தங்களுக்கான தடுப்பூசியைத் தேர்வு செய்து கொள்ளலாம் என்றும் பாலூட்டும் தாய்மார்கள் பிரசவத்துக்குப் பின் எப்போது வேண்டுமானாலும் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்ளலாம் என்றும் விதிமுறைகளில் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

தடுப்பூசி முதல் டோஸ் போட்ட பிறகு கொரோனாத் தொற்று ஏற்பட்டவர்கள், மருத்துவ ரீதியாகக் குணமடைந்து 4-8 வாரங்கள் காத்திருந்து 2 ஆவது டோஸினைச் செலுத்திக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டு குணமடைந்தவர்கள், 6 மாதங்கள் வரை தடுப்பூசி போட்டுக்கொள்வதை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோவிஷீல்ட் தடுப்பூசிக்கான இடைவெளி அதிகரிப்பு குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், ‘முதலில இரண்டாவது டோஸிற்கான இடைவெளி 4 வாரங்களாக இருந்தது. அதன் பின்னர் 6-8 ஆக மாற்றப்பட்டது. தற்போது 12-16 வாரங்களாக அதிகரிக்கப்படுகின்றது.

இது தகுதிவாய்ந்த அனைவருக்கும் தடுப்பூசி செலுத்துவதற்குப் போதுமான இருப்பு இல்லாததாலா? அல்லது தொழில்முறை அறிவியல் ஆலோசனையின்படிதானா? என கேள்வி எழுப்பியிருக்கிறார்.



## ரஜினிகாந்த் தடுப்பூசி செலுத்திக்கொண்டார்

கடந்த ஒருமாத காலமாக ‘அண்ணாத்த’ திரைப்படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்த நடிகர் ரஜினிகாந்த், நேற்று முன் தினம் சென்னை திரும்பியிருந்தார். ஹைதராபாத் ராமோஜி ஃபிலிம் சிட்டியில் படப்பிடிப்பை முடித்து விட்டு தனி விமானம் மூலம் அவர் சென்னையில் வந்திறங்கினார்.

வெளி மாநிலங்களில் இருந்து வருபவர்கள் சில நாள்கள் தனிமையில் இருக்க வேண்டும் என்ற சூழ்நிலையில், நேற்றைய தினம் நடிகர் ரஜினிகாந்த் சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொண்டார். இதனை அவரது மகள் சௌந்தர்யா தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். ‘நாம் ஒன்றாக இணைந்து இந்த கொரோனாத் தொற்றை வென்றெடுக்க வேண்டும்’ என்று குறிப்பிட்டு ரஜினிகாந்த் தடுப்பூசி செலுத்திக் கொண்ட புகைப்படத்தை அவர் பகிர்ந்துள்ளார்.

## தமிழகத்தில் ஊரடங்குக் கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்படும் சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் முடிவு

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக திட்டமிடுவதற்கான அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்றது.

ஆலோசனை கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியம், இந்தக் கூட்டத்தில் ஐந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. முழு ஊரடங்கைத் தீவிரப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அனைத்துக் கட்சிகளும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கையில் அரசுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவதாக கூட்டத்தில் உறுதியளித்துள்ளன.

அனைத்துக் கட்சிகளும் பொதுக்கூட்டங்கள் நடத்தப்போவதில்லை எனவும் நிவாரணப் பணிகளை முழு மனதுடன் செய்வதாகவும் உறுதியளித்துள்ளன. கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் அடங்கிய குழு அமைப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. மக்களின் உயிர் காக்கும் பொறுப்பு அரசிடம் இருக்கிறது. சில மருத்துவமனைகள் மனிதாபிமானமற்ற முறையில் நடந்துகொள்கின்றன. கடைசி நேரத்தில் நோயாளிகளை வெளியேற்றக்கூடாது என்று தெரிவித்தார்.

## தமிழகத்தில் கன மழைக்கு வாய்ப்பு சில இடங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை!

அரபிக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுப்பகுதி காரணமாக தமிழகத்தில் 4 நாள்களுக்கு பெரும்பாலான இடங்களில் மழை பெய்யும் என்றும், நாளையதினம் தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி ஆகிய 4 மாவட்டங்களில் அதி கனமழைக்கான சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனையொட்டியுள்ள லட்சதீவுப் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி நாளை மறுதினம் புயலாக மாறக்கூடும் என்றும் கூறப்பட்டுள்ளது. இந்தப் புயலுக்கு ‘தக்தே’ என்று பெயர் சூட்டப்பட்டுள்ளதாகவும் மியன்மார் நாடு பரிந்துரைத்துள்ள ‘தக்தே’ என்பது அந்நாட்டில் உள்ள ஒரு பல்லி இனத்தின் பெயர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாழ்வு மண்டலமாக உருவானதன் காரணமாக நாளை தேனி, திண்டுக்கல், கோவை, நீலகிரி மாவட்டங்களின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதி கனமழையும், மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்கள் மற்றும் தென் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் அதிகனமழையும், ஏனைய மாவட்டங்கள், புதுச்சேரி பகுதிகளில் அனேக இடங்களில் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு இருக்கின்றது எனவும் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதிகனமழை பெய்யும் பகுதிகளில் நிர்வாக ரீதியான சிவப்பு எச்சரிக்கை அறிவிப்பும் விடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதிகளில் 20 செ.மீ. அளவுக்கு மேல் மழை பதிவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இஸ்ரேல் நகரங்கள் மீது மீண்டும் காசா படையினர் ராக்கெட் தாக்குதல்



இஸ்ரேல் தலைநகரான டெல் அவிவ் மீது பலஸ்தீன காசா படைகள் சரமாரியாக ரொக்கெட் தாக்குதலை நடத்தின.

இருநாடுகளுக்கும் இடையே போர் மூளும் சூழல் காணப்படுகிறது. மக்கள் வீதிகளில் உயிரைக் காக்க ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

பலஸ்தீனர்களின் தீவிரவாதப் படைகள் காசாவில் பதுங்கியிருந்த இடத்தின் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதில் 83 பேர் கொல்லப்பட்டனர்.

இதற்குப் பழிக்குப் பழிவாங்கும் விதமாக இஸ்ரேல் நகரங்கள் மீது பலஸ்தீன படையினர் டஜன்கணக்கில் ரொக்கெட்டுகளை ஏவித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் பல கட்டடங்கள் சேதம் அடைந்தன. இஸ்ரேல் காவல்துறையினர் வன்முறையில் ஈடுபட்ட 374 பேரை கைது செய்துள்ளனர்.

அரபு வன்முறை கும்பலின் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது என்று கண்டனம் தெரிவித்த இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு வீடியோ வாயிலாக செய்தியாளர்களிடம் பேசுகையில், ராணுவத்தை அனுப்பி நிலையை கட்டுக்குள் கொண்டுவரத் திட்டமிட்டிருக்கிறேன் எனத் தெரிவித்தார்.

# இணைய பாதுகாப்பை மேம்படுத்த உத்தரவு

## அமெரிக்க அதிபர் பிறப்பித்தார்

அமெரிக்காவில் சட்டவிரோதமாக ஊடுருவி நடத்தப்பட்ட இணையவழித் தாக்குதலால் மிகப்பெரிய குழாய்வழி எரிபொருள் விநியோகத்தை நிறுத்த வேண்டிய நெருக்கடி கடந்த வாரம் வெள்ளிக்கிழமை ஏற்பட்டது. இதனால் அமெரிக்கா முழுவதும் எரிபொருள் விநியோகம் தடைபட்டு, விலை உயர்வுக்கு வழிவகுத்தது. பல மாநிலங்கள் அவசர நிலையை பிறப்பிக்க வேண்டியதாயிற்று.

இந்த நிலையில் இணையவழிப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான நிர்வாக உத்தரவை அந்த நாட்டின் ஜனாதிபதியான ஜோ பைடன் நேற்று முன்தினம் பிறப்பித்தார்.

இதையொட்டி பிறப்பிக்கப்பட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:



இன்று (நேற்று) ஜனாதிபதி ஜோ பைடன் நாட்டின் இணையப்பாதுகாப்பை மேம்படுத்துவதற்கும், கூட்டாட்சி அரசாங்க அமைப்புகளைப் பாதுகாப்பதற்கும் வகை செய்யும் நிர்வாக உத்தரவில் கையெழுத்துப் போட்டார். சமீபத்தில் சோலார் விண்ட்ஸ், மைக்ரோசொப்ட் எக்சேஞ்ச், காலனியல் பைப்லைன் போன்றவற்றில் இணைய பாதுகாப்பு அத்துமீறல்களால் நடந்த சம்பவங்கள், அமெரிக்காவின் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் நெட்வொர்க்குகள் மீது இணையவத்தொக்குதல் குற்றங்களை நாடு எதிர்கொள்வதை நினைவூட்டுகின்றன. எனவே அவற்றை பாதுகாப்பதன்முலம், இணைய பாதுகாப்புச் சட்டங்களை நவீனமயமாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை இந்த நிர்வாக உத்தரவு செய்யும் என கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் முழுமையாக தடுப்பூசி போட்டவர்கள் முகக்கவசம் அணியத் தேவையில்லை என அறிவிப்பு

அமெரிக்க மக்கள் வீட்டிலும் வெளியிலும் இனி முகக்கவசம் அணியத் தேவையில்லை என்று அந்நாட்டின் நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அமைப்பான சி.டி.சி. தெரிவித்துள்ளது.

இரு முறையும் தடுப்பூசிப் போட்டுக் கொண்டவர்கள் கொரோனா காலக் கட் டுப்பாடுகளைப் பொருட்படுத்தத் தேவையில்லை என்றும் அவர்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்ளலாம் என்றும் சி.டி.சி .அறிவித்துள்ளது.

பணியிட வழிகாட்டல்கள், பொது இடங்களில் அரசு விதித்த கட்டுப்பாடுகள் என்று தேவைப்படும் இடங்களில் அந்தந்த சூழலில் மட்டும் முகக்கவசம் அணியலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்கா செல்பவர்களுக்கு பரிசோதனைகள் தேவையில்லை என்றும் அவர்களைத்தனிமைப்படுத்திக் கொள்ள கட்டாயம் ஏதுமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வெளிநாட்டில் இருந்து விமானத்தில் பயணிக்கும் முன்பு கொரோனா இல்லை என்ற நெகட்டிவ் சான்றை வைத்திருக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.



# மறைந்த இங்கிலாந்து இளவரசர் பிலிப் நினைவாக அஞ்சல் தலைகள் வெளியீடு

மறைந்த இங்கிலாந்து இளவரசர் பிலிப்பின் நினைவாக அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டன. இங்கிலாந்து அரச குடும்ப வரலாற்றில் நீண்ட காலம் இளவரசராக இருந்தவர் என்ற பெருமைக்குரிய இளவரசர் பிலிப், கடந்த மாதம் 9ஆம் திகதி காலமானார்.

அவரது உடல் விண்ட்சர் கோட்டை வளாகத்தில் உள்ள புனித ஜார்ஜ் தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இந்நிலையில் மறைந்த எடின்பர்க் இளவரசர் பிலிப் நினைவாக 4 அஞ்சல் தலைகள் வெளியிடப்பட்டுள்ளது.





# தடுப்பூசி மையமாக மாறிய சுவிட்ஸர்லாந்தில் தேவாலயம்

சுவிட்ஸர்லாந்தின் சூரிச் நகரில் உள்ள புனித ஜேக்கப் தேவாலயம் தடுப்பூசி செலுத்தும் மையமாக மாற்றப்பட்டுள்ளது.

அங்கு தடுப்பூசி போட வரும் மக்களை இசைக்கலைஞர் ஒருவர் பியானோ வாசித்து மகிழ்வூட்டிவருகிறார். வாரத்திற்கு ஒருமுறை மட்டுமே இந்த தேவாலய தடுப்பூசி மையம் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனைக்குச் சென்றால் தடுப்பூசி குறித்த அச்சம் ஏற்படும் என்றும், தேவாலயத்தில் தடுப்பூசி போட்டுக்கொள்வது மனதுக்கு அமைதியைத் தருகின்றது என அங்கு வரும் மக்கள் தெரிவிக்கின்றனர்.



# கங்கை நதிக்கரையில் சடலங்கள் புதைப்பு தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ்

கொரோனாவால் தினமும் மக்கள் பலியாகி வரும் நிலையில், இந்தியா முழுவதும் மயானங்களில் சடலங்களை எரியூட்ட இடமில்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகி வருகின்றன. பல மாநிலங்களில் மயானத்தின் வாசல்களில் சடலங்கள் வரிசையில் அடுக்கப்பட்டிருக்கும் படங்களும் பகிரப்படுகின்றன.

இந்த இக்கட்டான நிலையில், கடந்த இரு தினங்களுக்கு முன் உத்தரப்பிரதேசத்தின் எல்லையை ஒட்டிய பீகாரின் பக்சர் மாவட்டத்திலும் உத்தரப்பிரதேசத்தின் காஜிபூர் மாவட்டத்திலும் கங்கை நதிக்கரையில் நூற்றுக் கணக்கான சடலங்கள் மிதந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது.

கொரோனாவால் இறந்தவர்களின் சடலங்களை எரிக்க இடமில்லாமல் அவர்களது உறவினர்களேகங்கையில் வீசியிருக்கலாம் என ஒரு செய்தியும் கொரோனாப் பலியை மறைக்க உத்தரப் பிரதேச அரசு இவ்வாறு சடலங்களை கங்கையில் வீசியிருப்பதாக இன்னொருதரப்புச் செய்திகளும் வெளியாகி குழப்பங்களை உருவாக்கியுள்ளன.

பீகார் அதிகாரிகளும், உத்தரப் பிரதேசத்திலிருந்தே இவ்வாறு சடலங்கள் கங்கையில் வீசப்பட்டிருப்பட்டிருக்கிறது என புகார் கூறியுள்ளனர். இந்தச் சம்பவத்திற்கு விடை தெரியாத நிலையில், உடனடியாக விசாரணை நடத்தித் தகுந்த நடவடிக்கை எடுக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் செய்தியின் அதிர்வலைகள் மறையும் முன்னர் மற்றொரு அதிர்ச்சிச் செய்தி வெளியாகியுள்ளது. உத்தரப் பிரதேசத்தின் உன்னாவ் மாவட்டத்தில் புக்சர் மற்றும் ரவுதாபூர் ஆகிய கிராமங்களில் கங்கை கரையில் பல சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பன கண்டறியப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோப் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் பரவியுள்ளன. கடந்த மாதம் மட்டும் கங்கைக் கரை மணற்பரப்பில் 300 இற்கும் மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தற்போது கொரோனா இறப்பு அதிகரித்து வரும் நிலையில், சடலங்களை எரியூட்ட செலவும் அதிகரித்துள்ளது. எரிப்பதற்கு மரக்கட்டைகள்கூடக் கிடைக்காததால் சடலங்களை கிராம மக்கள் புதைத்து வருகின்றனர் எனவும் கூறப்படுகிறது. இவ்வாறு புதைக்கப்படும் சடலங்களை நாய்கள் தோண்டி கடித்து குதறி வரும் சம்பவங்களும் நடைபெறுகின்றன எனவும், சடலங்களைப் புதைக்க முடியாத அளவுக்கு முழுக்கரையும்நிரம்பிஉள்ளதென்றும் தகவல்கள் வெளியாகின்றன. இதனால் நோய் தொற்று பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து மாவட்ட ஆட்சியாளர் கூறுகையில், "கங்கைக் கரையில் சடலங்கள் புதைக்கப்பட்டிருப்பதை எங்கள் குழு கண்டறிந்துள்ளது. இதுபோல் வேறு இடங்களிலும் சடலங்கள் புதைக்கப்பட்டிருக்கிறதா என ஆய்வு செய்கிறோம். இத்தகைய செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார். இதற்கிடையே, கங்கையில் சடலங்கள் மிதந்த விவகாரம்தொடர்பாக பீகார் மாநில அரசு அறிக்கை அளிக்கவேண்டும் என்று பாட்னா உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உன்னாவ் மாவட்டத்தின் கங்கைக் கரையை ஒட்டிய பகுதியில் வசிக்கும் மக்கள் கூறுகையில், "கொரோனாவின் ஆரம்ப கட்டத்தில் தினமும் 2-3 சடலங்கள் மட்டுமே இங்கு வந்து கொண்டிருந்தன. இப்போது தினமும் சராசரியாக 10-12 சடலங்கள் வருகின்றன. அவற்றில் ஒரு சிலவற்றை மட்டுமே எரிக்கின்றனர். வசதியில்லாதவர்கள் சடலங்களைப் புதைத்து விட்டுச் செல்கின்றனர். இதனால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டுள்ளனர். கங்கையில் சடலங்கள் மிதந்தது தொடர்பாக மத்திய ஜல் சக்தி அமைச்சகமும் உத்தரப்பிரதேச மற்றும் பீகார் மாநில அரசுகளும் நான்கு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென தேசிய மனித உரிமை ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பயணத் தடைகளை மீறிச் செயற்படுவோரை கண்டறிய விசேட சோதனை நடவடிக்கை

மட்டக்களப்பு மாவட்டத்தில் பயணத் தடைகளை மீறிச் செயற்படுவோரைக்கண்டறியும்வகையில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நாடளாவிய ரீதியில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றின் வேகத்தினைக் கட்டுப்படுத்தும் வகையில் நேற்று இரவு முதல் நாடளாவிய ரீதியில் பயணத் தடை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதன்கீழ் மட்டக்களப்பு மாவட்டம் முற்றாக முடங்கியுள்ளதுடன் மக்கள் நடமாட்டம் இல்லாததைக் காண முடிகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்திற்கான எந்த போக்குவரத்துகளும் நடைபெறாத நிலையில் அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ள நிலையினைக் காண முடிகின்றது.

மருந்தகங்கள் மட்டும் இயங்கும் நிலையில் மக்கள் வருகையில்லாத காரணத்தினால் வெறிச்சோடிக் காணப்படுகின்றது.

# மட்டக்களப்பில் மணல் வீதி புனரமைப்பு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக புனரமைப்பு செய்யப்படாமல் பற்றைக் காடாக காணப்பட்ட மணல் வீதியொன்று செப்பனிடப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.

இவ்வாறாக மூன்று தசாப்த காலமாக செப்பனிடப்படாமல் இருந்த வீதி கிரவல் இடப்பட்டு போக்குவரத்திற்கு உகந்த முறையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

'மணல் வீதியில்லா மாநகரம்' எனும் திட்டத்தின் கீழ் கல்லடி விநாயகர் வீதியினையும் அரசாங்க விடுதி வீதியினையும் இணைக்கும் இவ் மணல் வீதியே இவ்வாறு செப்பனிடப்பட்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவனின் முன்மொழிவிற்கு அமைவாகவே 30 வருடங்க ளின் பின்னர் இவ்விதி புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக விடப்பட்டுள்ளது.



# விவசாயிகளை சந்தித்தார் அமைச்சர் எஸ்.வியாழேந்திரன்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியனாறு பகுதியில் உள்ள மாவடியோடை மற்றும் மரப்பாலம் ஆகிய பகுதிகளில் உள்ள நிலக்கடலை, அதனோடு இணைந்த பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுகின்ற விவசாயிகளை இன்று இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் களவிஜயமென்றின் ஊடாக சந்தித்திருந்தார்.

இதன்போது அவர்களுடைய தேவைகள் மற்றும் குறைபாடுகளையும் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் கேட்டு அறிந்துகொண்டதுடன், கொவிட் சூழலிலும் தமது விவசாய நடவடிக்கைகளை மிகவும் திறம்பட மேற்கொண்டுவரும் விவசாயிகளையும் விவசாய அமைப்புக்களையும் இதன்போது பாராட்டினார்.



# மட்டக்களப்பில் சிகிச்சை பெற்றுவந்த 55 நோயாளர்கள் குணமடைந்து வீடு திரும்பினர்

இலங்கையில் கொவிட் 19 தொற்று நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கொவிட் நோயாளர்களை குணப்படுத்தும் மூன்று வைத்தியசாலைகளிலும் இருந்து இன்றைய தினம் அதிகளவிலானோர் குணமடைந்து வீடு திரும்புகின்றனர் என சுகாதாரத் துறையினர் தெரிவிக்கின்றனர். அதற்கமைவாக, கரடியனாறு வைத்தியசாலையில் இருந்து 19 பேரும், (யாழ்ப்பாணம் -1, மட்டக்களப்பு -14, திருகோணமலை - 3, கெக்கிராவ - 1)

காத்தான்குடி வைத்தியசாலையில் இருந்து 18 பேரும் (திருகோணமலை - 17, மொனராகலை - 1)

கல்லாறு வைத்தியசாலையில் இருந்து 18 பேருமாக (மட்டக்களப்பு - 17, திருகோணமலை -1)

இவ்வாறாக கொவிட் தொற்றுக்கு உள்ளாகி பூரண குணமடைந்த 55 பேர் இன்று தமது வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# உயிர் காக்கும் உன்னத பணியில் இளைஞர்கள்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனாத் தொற்று நிலைமையின் காரணமாக மாவட்டங்கள் தோறும் தொற்றுக்குள்ளாவோருக்கு சிகிச்சை வழங்கக்கூடியவாறான ஏற்பாடுகள் சுகாதார பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அதற்கு இணையாக இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அவர்களது ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக 10 நாள்களில் 10,000 கட்டில்கள் எனும் செயல்திட்டமொன்று நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரு கின்றது.

அதற்கு அமைவாக மட்டக்களப்பு இளைஞர்களும் தமக்கு வழங்கப்பட்டுள்ள உன்னத பணியை மிகவும் திறம்பட ஆற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் வீடுகளில் இடம்பெறும் நோன்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று பரவல் காரணமாக, புனித நோன்புப் பெருநாள் தினமான இன்று இஸ்லாமியர்கள் வீடுகளிலேயே தங்களது நோன்புப் பெருநாளுக்கான தொழுகைகளை நிறைவேற்றினார்கள்.

மட்டக்களப்பு - கல்குடா தொகுதி பள்ளிவாசல்கள் மூடப்பட்டுள்ள நிலையில், புத்தாடைகளை அணிந்து, வீடுகளில் குடும்ப உறவினர்கள் கூடி, நோன்புப் பெருநாள் தொழுகையில் ஈடுபட்டதுடன், பிராத்தனைகளிலும் ஈடுபட்டனர்.

# மே18 எழுத்துபொறிக்கப்பட்ட சிரட்டைகள் நேற்று வழங்கல்

திருகோணமலை மாவட்ட சிவில் அமைப்புகளின் ஒன்றியத்தின் ஊடாக, அகரம் மக்கள் மய்யம் அமைப்பின் ஒருங்கிணைப்பில், மே 18 எழுத்து பொறிக்கப்பட்ட சிரட்டைகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட எமது இரத்தச் சொந்தங்களை நினைவு கூரும் முகமாக முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தின் முதலாம் நாளாகிய நேற்று, திருகோணமலை மக்கள் வீடுகளில் விளக்கேற்றி அஞ்சலி செய்துள்ளனர்.

எதிர்கால சந்ததியினருக்கு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நினைவு தினத்தை நடத்தி செல்வதற்காகவும், திருகோணமலை இளைஞர்களால் முள்ளிவாய்க்கால் கஞ்சியினை நினைவு கூரும் வகையில் அடையாளமாக சிறிதளவு அரிசி உள்ளிட்ட மற்றும் சிட்டி விளக்குடன் கூடிய மே 18 பொறிக்கப்பட்ட சிரட்டைகள் கொரோனாப் பாதுகாப்பு நடைமுறைகளைப் பேணி வீடுகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

# 42 கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் பூட்டு

இலங்கையில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலையடுத்து 3 மாவட்டங்களில் உள்ள 42 கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதன்படி, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள 42 கிராம சேவகர் பிரிவுகள் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, திருகோணமலை மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ள 8 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# சம்பியன்ஸ் லீக் காஸ்பந்து இறுதிப்போட்டி

## துருக்கியிலிருந்து போர்த்துக்கல்லுக்கு மாற்றம்




ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து இறுதிப்போட்டிக்கு இங்கிலாந்தைச் சேர்ந்த மன்செஸ்டர் சிட்டி-செல்சி அணிகள் தகுதி பெற்றுள்ளன. இந்தப் போட்டி துருக்கியில் உள்ள இஸ்தான்புல் நகரில் வருகிற 29 ஆம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தொற்று அதிகரிப்புக் காரணமாக துருக்கியை இங்கிலாந்து அரசு சிவப்புப் பட்டியலில் வைத்துள்ளதனால் துருக்கி நாட்டுக்குப் பயணம் செய்ய இங்கிலாந்து நாட்டினருக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இதனால், இந்தப் போட்டியை நேரில் காண இங்கிலாந்து ரசிகர்கள் இஸ்தான்புல் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து இறுதிப்போட்டியை இங்கிலாந்தில் நடத்துவது குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால் கொரோனாத் தடுப்பு விதிமுறைகள் அதற்கு இடம்கொடுக்காததால் இந்த முயற்சி கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இப்போது, சம்பியன்ஸ் லீக் இறுதிப்போட்டியை இஸ்தான்புல் நகரில் இருந்து போர்த்துக்கல் நாட்டில் உள்ள போர்டோ நகருக்கு மாற்றுவதாக ஐரோப்பிய கால்பந்து சங்கம் நேற்று அறிவித்தது. போர்த்துக்கல் நாட்டுக்குச் சென்று திரும்பும் இங்கிலாந்து நாட்டினர் தனிமைப்படுத்துதலைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால் இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 29 ஆம் திகதி நடைபெறவுள்ள இந்தப் போட்டியை நேரில் காண இரு கழகங்களையும் சேர்ந்த தலா ஆறாயிரம் ரசிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. அதற்கான நுழைவுச் சீட்டுக்களை அவர்கள் வழக்கம் போல தங்கள் கழகங்களின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### இத்தாலி ஓபின் டென்னிஸ் பெண்கள் பிரிவு

# ஜெசிகா பெகுலா காலிறுதியில் தோல்வி!


ரோம் நகரில் நடந்து வரும் இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீராங்கனையான அவுஸ்ரேலியாவின் அஷ்லெ பார்ட்டி 6 - 3, 6 - 3 என்ற நேர் செட்டில் ரஷ்யாவின் குடெர்மிடோவாவை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்தார். மற்றொரு ஆட்டத்தில் மட்ரிட் ஓபின் சம்பியனான பெலாரஸின் சபலென்கா 5 - 7, 3 - 6 என்ற நேர் செட்டில் அமெரிக்காவின் கோகோ காஃப்பிடம் அதிர்ச்சிகரமாகத் தோல்வி அடைந்தார். அதே சமயம் பிரெஞ்ச் ஓபின் சம்பியனான போலந்தின் ஸ்வியாடெக், செக்குடியரசைச் சேர்ந்த கரோலினா பிளிஸ்கோவா, அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா ஆகியோர் 3 ஆவது சுற்றில் வெற்றி கண்டனர்.

தற்போதைய சம்பியனான ருமேனியாவின் சிமோனா ஹாலெப் தன்னை எதிர்த்த ஜெர்மனியின் ஏஞ்சலிக் கெர்பருக்கு எதிராக முதல் செட்டை 6-1 என்ற கணக்கில் வென்று 2 ஆவது செட்டில் 3-3 என்ற கணக்கில் சமநிலையில் இருந்தபோது இடது பின்னங்காலில் ஏற்பட்ட வலியால் போட்டியிலிருந்து விலகியிருந்தார்.

காலிலிறுதியில் குரோசியாவின் பெட்ரா மார்ட்டிக்கை எதிர்கொண்ட ஜெசிகா பெகுலா, 7-5, 6-4 என்ற நேர் செட்டுகளில் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார்.



# ஓய்வுபெறுகிறார் நியூசிலாந்தின் வட்லிங்!



இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி இங்கிலாந்தில் உள்ள சௌத்தாம்ப்டன் மைதானத்தில் ஜூன் மாதம் 18 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த இறுதிப் போட்டி முடிந்தவுடன் அனைத்து விதமான கிரிக்கெட் தொடர்களிலிருந்தும் தான் ஓய்வுபெறப்போகின்றேன் என நியூசிலாந்து அணியின் 36 வயதாகும் விக்கெட் காப்பாளர் பிஜே வட்லிங் அறிவித்துள்ளார். நான் ஓய்வு முடிவை அறிவிப்பதற்கு இதுவே சரியான நேரம். நியூசிலாந்திற்காக டெஸ்ட் கிரிக்கெட் விளையாடியதை மிகப் பெரிய கௌரவமாகக் கருதுகிறேன். டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, நான் நிச்சயமாக சில நல்ல தருணங்களை இழக்கப் போகிறேன் என்று எனக்குத் தெரியும். குறிப்பாக ஐந்து நாள்கள் டெஸ்ட் போட்டி விளையாடிவிட்டு, கடைசி நாளின் மாலைப் பொழுதில் மற்ற வீரர்களுடன் சேர்ந்து உணவு உண்பதை நிச்சயமாக நான் இழப்பேன். இனிவரும் காலங்களில் என் மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடனும் அதிகமான நேரத்தைச் செலவிட உள்ளேன். உலகத் தரம் வாய்ந்த பல வீரர்களுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடியுள்ளேன். அவர்களின் மூலமாக எனக்கு நிறைய உதவிகளும் கிடைத்தன. நான் எப்போதும் அதற்கு நன்றியுடையவனாக இருப்பேன் என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

நியூசிலாந்து அணிக்காக 73 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள வட்லிங், 3,773 ஓட்டங்களை எடுத்துள்ளார். 28 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகளிலும், ஐந்து ரி - 20 போட்டிகளிலும் இவர் விளையாடியுள்ளார்.

### இத்தாலி ஓபின் டென்னிஸ் ஆண்கள் பிரிவு

# ஜோகோவிச், நடால் இருவரும் காலிறுதியில்



இத்தாலி ஓபின் டென்னிஸ் தொடர் ரோம் நகரில் நடந்து வருகிறது. களிமண் தரைப் போட்டியான இதில் நேற்று ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 3 ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஐந்து முறை சம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் 6 - 2, 6 - 1 என்ற நேர் செட்டில் ஸ்பெயினின் டவிடோவிச்சை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறினார்.

கொரோனா அச்ச நிலைக்குப் பின்னர் இந்தத் தொடரில் முதல் முறையாக இந்த ஆட்டத்தில் 25 சதவீத ரசிகர்கள் அனுமதிக்கப்பட்டனர். போட்டி முடிந்த பின்னர், ரசிகர்கள் முன்னிலையில் தான் உற்சாகமாக ஆடினேன் என ஜோகோவிச் குறிப்பிட்டார். ஜோகோவிச் காலிறுதியில் கிரீசின் சிட்சிபாசை எதிர்கொள்கிறார். முன்னதாக சிட்சிபாஸ் 7 - 6 (7 - 3), 6 - 2 என்ற நேர் செட்டில் இத்தாலியின் பெரேட்டினியை வென்றி ருந்தார். மற்றொரு ஆட்டத்தில் 9 முறை சம்பியனான ஸ்பெயினின் ரபெல் நடால் 3 - 6, 6 - 4, 7 - 6 (7 -3) என்ற செட் கணக்கில் கனடாவின் டெனிஸ் போவலோவைத் தோற்கடித்து காலிறுதிக்குள் நுழைந்தார். 3 ஆவது செட்டில் தோல்வியின் விளிம்புக்குச் சென்ற நடால் அதன் பிறகு டைபிரேக்கர் வரை போராடித் தப்பித்துக்கொண்டார். இந்த ஆட்டம் மூன்றரை மணித்தியாலங்கள் நீடித்திருந்தது.

# நாளொன்றுக்கு 2,500 இற்கும் அதிகமான கொரோனாத் தொற்றாளர்கள் பதிவாகலாம்

## சுகாதாரத் தரப்பு எச்சரிக்கை

நாட்டில் நாளாந்தம் சுமார் 2 ஆயிரத்து 500 பேருக்கு கொவிட் தொற்றுறுதி செய்யப்படுகிறது.

எதிர்வரும் தினங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிப்பதோடு, மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக் கூடும் என்று சுகாதாரத் தரப்பு எச்சரித்துள்ளது.

எனவே தனிமைப்படுத்தல் கட்டுப்பாடுகளை மிக இறுக்கமாகப் பின்பற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முறையாக ஒரே நாளில் சுமார் 2 ஆயிரத்து 500 தொற்றாளர்கள் சிகிச்சை பெறும் நிலை உருவாகியுள்ளது.

உருவாகியுள்ள இந்த அபாய நிலைமையை பொது மக்களின் முழுமையான ஒத்துழைப்பின்றி கட்டுப்படுத்த முடியாது என்றும் சுகாதாரத் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றும் 2 ஆயிரத்திற்கும் அதிக தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதோடு, புதனன்று 18 மரணங்களும் பதிவாகின. அத்தோடு வியாழக்கிழமை காலை 6 மணி முதல் கம்பஹா, காலி மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் 11 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டன.

வியாழன் இரவு 11 மணியிலிருந்து மூன்று நாள்களுக்கு நாடளாவிய ரீதியில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும், தொற்றாளர்கள் அதிகளவில் பதிவாகின்ற பிரதேசங்களும் பரவல் தீவிரமாகக் காணப்படுகின்ற பிரதேசங்களும் தனிமைப்படுத்தப்படும் செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

2,500 ஐ விட அதிக தொற்றாளர்கள் பதிவாகலாம். நாட்டில் தற்போது நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றனர். எதிர்வரும் நாள்களில் இதனைவிடவும் அதிக தொற்றாளர்கள் இனங்காணப் பட லாம் என்றும் தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

வெளிநாட்டிலிருந்து வந்த ஏதேனுமொரு பிரஜை ஊடாகவே இங்கிலாந்து வைரஸ் இலங்கையிலும் நுழைந்திருக்கக் கூடும்.

இந்திய வைரஸும் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப் பிரஜையொருவரின் மாதிரியிலேயே இனங்காணப்பட்டுள்ளது.

எனவே இதுபோன்ற அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுகின்றமையால் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.

எனவே இந்த விவகாரத்தில் தற்போது வழமையை விட மிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் முதன் முறையான புதனன்று 25 ஆயிரத்துக்கும் அதிகமான தொற்றாளர்கள் ஒரே நாளில் சிகிச்சையில் உள்ளனர்.

இதேவேளை நேற்று வியாழக்கிழமை 2 ஆயிரத்து 269 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டனர். அதற்கமைய மொத்த தொற்றாளர் எண்ணிக்கை ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 796 ஆக அதிகரித்துள்ளது. இனங்காணப்பட்ட மொத்த தொற்றாளர்களில் ஒரு லட்சத்து 8 ஆயிரத்து 802 பேர் குணமடைந்துள்ளதோடு, 24 ஆயிரத்து 932 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

நேற்று வியாழக்கிழமை தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகள்

கம்பஹா – திவுலப்பிட்டி பொலிஸ் பிரிவில் பலுகஹவெல கிராம உத்தியோகத்தர் பிரிவு, காலி – அஹங்கம பொலிஸ் பிரிவில் கரந்துன்கொட, கொவியாபான, கஹவன்னகம மற்றும் தொம்மன்னபகொட ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், ஹபராதுவ பொலிஸ் பிரிவில் லனு மோதர, பொனவிஸ்டாவ, கட்டுகுருந்த கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், இரத்தினபுரி –பெல்மடுல்லை பொலிஸ் பிரிவில் தெனவக்க பாத்தகட, திப்பிட்டிகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுமம், குருவிட்ட பொலிஸ் பிரிவில் குருவிட்ட மற்றும் தெல்கமுவ ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகள் கொழும்பு – பாதுக்க பொலிஸ் பிரிவில் உக்கல்ல கிராம உத்தியோகத்தர் பிரிவு, அம்பாறை – தெஹிணத்தகண்டி பொலிஸ் பிரிவில் –தெஹியத்தகண்டி கிராம உத்தியோகத்தர் பிரிவு, நுவரெலியா – ஹற்றன் பொலிஸ் பிரிவில் போடைஸ்– கோனகல்ல மற்றும் 30 ஆம் ஏக்கர் என்பன தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

நேற்று 24 கொவிட்ட மரணங்கள் பதிவாகின 2021 மே மாதம் 08 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 13 ஆம் திகதி வரை இடம்பெற்றுள்ள கொவிட் 19 தொற்று நோயாளர்களில் 24 பேர் உயிரிழந்துள்ளமையை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அவர்கள் நேற்று வியாழக்கிழமை உறுதி செய்துள்ளதுடன், அதற்கமைய இலங்கையில் பதிவாகியுள்ள கொவிட் 19 தொற்று மரணங்களின் மொத்த எண்ணிக்கை 892 ஆகும்.



# ‘வெப்ப ஈரப்பதன் ஊட்டப்பட்ட ஒட்சிசன் சிகிச்சை பிரிவு’

## விமானப்படையினர் தயாரித்து ஜனாதிபதியிடம் கையளிப்பு

சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளின் பயன்பாட்டுக்காக இலங்கை விமானப்படையால் தயாரிக்கப்பட்ட வெப்ப ஈரப்பதமூட்டப்பட்ட ஒட்சிசன் சிகிச்சைபிரிவு ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

கொவிட் 19 தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், புத்தாக்கத் துறையில் சர்வதேச தூதுவரான வித்யாஜோதி, கலாநிதி பந்துல விஜேவின் எண்ணக்கருவில் பேராசிரியர் ரனில் டி சில்வா மற்றும் வைத்தியர் திலங்க ரத்னபால உள்ளிட்ட முன்னணி மருத்துவ நிபுணர்கள் குழுவின் பங்களிப்புடன் இந்த உபகரணத் தொகுதி தயாரிக் கப்பட்டுள்ளது.

இந்த சாதனம் சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளுக்கு அதிக அளவு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலை ஒட்சிசனை முழு ஈரப்பதத்தில் வழங்குகிறது.

விமானப்படைத் தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பதிரனவின் வழிகாட்டுதலின் பேரில், விமானப்படை கட்டளை அதிகாரி குரூப் கப்டன் பிரசன்ன மார்டினோவின் மேற்பார்வையில் விமானப்படையின் பொறியியல் பிரிவின் விமான பராமரிப்பு பிரிவினால் தயாரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. வரையறைகள், பாதுகாப்பு அம்சங்கள் மற்றும் செயல்திறன் தரங்களை சரிபார்த்த பிறகு, இது இலங்கை தேசிய ஔடத ஒழுங்குபடுத்தல் அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், மொரட்டுவை பல்கலைக்கழகம் இதன் மின் பாதுகாப்பு தரங்களின் இணக்கப்பாட்டை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த சாதனத்தை உற்பத்திசெய்வதற்காக 15 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருந்தாலும், 3 லட்சம் ரூபா என்ற குறைந்த செலவில் உற்பத்தி நடவடிக்கைகள் நிறைவுபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். தற்போது, 50 உபகரண தொகுதிகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதுடன், சுகாதாரத் துறையின் தேவைக்கேற்ப தொடர்ச்சியாக உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த சாதனத்தின் செயற்பாடு பற்றி ஜனாதிபதிக்கு விளக்கமளிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, பாதுகாப்பு செயலாளர் (ஓய்வு பெற்ற) ஜெனரல் கமல் குணரத்ன, சுகாதார அமைச்சின் செயலாளர் சஞ்சீவ முனசிங்க மற்றும் விமானப்படை த் தளபதி ஏயார் மார்ஷல் சுதர்ஷன பதிரண ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சுகாதார நடைமுறைகளை மீறி ஒன்று கூடினர் மதுப் பிரியர்கள்



மன்னார் பகுதியில் அமைந்துள்ள மது விற்பனை நிலையத்தில் நேற்று (வியாழக்கிழமை) மாலை சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது பலர் மதுபானப் பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்துள்ளார் என்றும் குறித்த பகுதியில் பொலிஸார் கடமையில் ஈடுபடவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று இரவு முதல் எதிர்வரும் மூன்று தினங்கள் நாடு முழுவதும் பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து வர்த்தக நிலையங் களையும் மூடுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மதுபான சாலைகளை மாலை 6 மணியுடன் மூடுமாறும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், மூன்று தினங்கள் மதுபான சாலைகள் மூடப்பட உள்ளமையால் நேற்று மாலை மன்னாரில் உள்ள மதுபான சாலைகளுக்கு முன் அதிகளவிலான மதுப் பிரியர்கள் கூடியிருந்தனர்.

மது விற்பனை நிலையம் அமைந்துள்ள பகுதியில் உள்ள வீதி முழுவதும் மோட்டார் சைக்கிள் உட்பட தமது வாகனங்களை நிறுத்தி விட்டு சுகாதார நடைமுறைகளைக் கருத்தில் கொள்ளாது மதுபிரியர்கள் மதுபான பொருள்களைக் கொள்வனவு செய்ய முண்டியடித்தனர்.

மதுபான சாலைகளுக்கு முன் பிரதான வீதியில் மது பிரியர்கள் நீண்ட வரிசையில் காணப்பட்டமையுடன், மாலை 6 மணிக்கு மதுபான சாலைகளை மூட முடியாத அளவிற்கு மக்கள் கூட்டம் காணப்பட்டது.

மது பிரியர்கள் எதிர்வரும் 3 தினங்களுக்குத் தேவையான மதுபானப் பொருள்களை கொள்வனவு செய்து சென்றுள்ளனர்.

சுகாதார நடை முறைகளை மீறி அதிக அளவிலான கூட்டம் காணப்பட்டிருந்த நிலையில் பொலிஸார் குறித்த பகுதிக்கு வரவில்லை எனவும், மாலை 6 மணிக்கு பின்பே குறித்த பகுதிக்கு வந்தனர் எனவும் தெரிய வருகின்றது.

இதனால் குறித்த பகுதியில் நீண்ட நேரம் சுகாதார நடை முறைகள் பின்பற்றப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் யுபுன் அபேகோன் சாதனை

இலங்கையின் நட்சத்திர குறுந்தூர ஓட்ட வீரரான யுபுன் அபேகோன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளார்.

இத்தாலியில் இடம்பெற்று வரும் சவோனா தடகள போட்டிகளில் அவர் இந்தச் சாதனையை படைத்துள்ளார்.

இவர் 100 மீற்றர் தூரத்தை 10.15 விநாடிகளில் கடந்தே இந்தச் சாதனையைப் படைத்துள்ளார்.

